**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 209/2006**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–3 நல்லசிவம் –** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்தேன். நான் மாவத்துார் கிராமம் கழுத்தரிக்காப்பட்டியில் வசிப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆதார் அட்டை வைத்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 598 ஆகும். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால், தரகம்பட்டி பக்கத்தில் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொந்தமாக ஏதேனும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கும், நான் வசிக்கும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால், சுமார் 3 கிமீ துாரம் இருக்கும். என்னை சாட்சியளிக்க யார் அழைத்தது என்றால் மும்மூர்த்தி அழைத்தார். எனக்கு சாட்சிய வாக்குமூலத்தின் படி தாவா சொத்தை மும்மூர்த்தி வகையறா அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்கள்தான் அனுபவிக்கிறார்கள். நான் குத்தகைக்கு ஓட்டுகிறேன்.

2) எனது சாட்சிய வாக்குமூலத்தில் எந்த தேதியில், எந்த வருடத்தில், எவ்வளவு தொகைக்கு குத்தகைக்கு எடுத்தேன் என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, 15 வருடத்திற்கு குத்தகைக்கு எடுத்துள்ளேன். எத்தகை ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளேன் என்றால், சுமார் 7 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளேன். எனக்கு யார் குத்தகைக்கு விட்டது என்றால் மும்மூர்த்தி விட்டார். நான் மும்மூர்த்தியிடம் இருந்து குத்தகைக்கு எடுத்து தாவா சொத்தை விவசாயம் செய்வதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால்

இல்லை.  எனக்கு இவ்வழக்கு சொத்து எங்கு உள்ளது என்ற விபரம் தெரியாது என்றும், நான் வழக்கு சொத்தை குத்தகைக்கு எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மும்மூர்த்தி ராஜா தரப்பில் தயார் செய்த பிரமாண வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**